பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 06 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
2. எல்லை தாண்டிய தீவிரவாத பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியா விரும்புவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
3. ஆந்திர பிரதேச சட்டப்பேரவைக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராக தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் திரு சந்திரபாபு நாயுடு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
4. ஒடிஸா மாநில புதிய முதலமைச்சராக பிஜேபி-யைச் சேர்ந்த திரு மோகன் சரண் **Majhi** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
5. ஜெர்மனி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்ஸின் அல்பனோ **Olivetti** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான அமைச்சர்கள் இன்று தங்களது இலாக்கா பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

உள்துறை அமைச்சராக திரு அமித்ஷா இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு சிவராஜ்சிங் சௌஹான், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

விவசாயிகளின் நலனுக்காக தமது அமைச்சகம் விரைந்து செயலாற்றும் என்றும் அவர் கூறினார்.

மத்திய கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு கஜேந்திரசிங் ஷெகாவத், தமது துறை மூலம் நாட்டிற்கு தனித்துவமிக்க புகழையும் பெருமையையும் சேர்க்க இருப்பாகத் தெரிவித்தார்.

சுற்றுலா அமைச்சகத்துடன் இணைந்து வளர்ச்சியடைந்த பாரதத்தின் இலக்குகளை எட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சரா பொறுப்பேற்ற திரு ஜித்தன்ராம் மாஞ்சி, வளர்ச்சிக்காகவும், ஏழை எளிய மக்களின் மேம்பாட்டிற்காகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த உள்ளதாகத் தெரிவித்தார்.

சட்டம் மற்றும் நீதித்துறை தனிப் பொறுப்புடன் கூடிய இணை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு அர்ஜூன்ராம் மெக்வால், நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு விரைந்து தீர்வுகாண்பதற்கு தமது அமைச்சகம் உயர் முன்னுரிமை அளிக்கும் என்று கூறினார்.

திரு ஹர்தீப்சிங்பூரி பெட்ரோலியத்துறை அமைச்சராகவும், திரு கிரண் ரிஜிஜூ சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகராவும், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சராக திருமதி அன்னபூர்ணா தேவியும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

தொலைத் தகவல் தொடர்புத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா, பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையின் கீழ் தகவல் ஒலிபரப்புத்துறை பெருமளவு வளர்ச்சி கண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட டாக்டர் எல் முருகன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அரசின் திட்டங்களையும், கொள்கைகளையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும், வளர்ச்சியடைந்த பாரதத்துக்கான திட்டங்களுக்கு உத்வேகம் அளிப்பதிலும் தமது அமைச்சகம் சிறப்பாக செயலாற்றும் என்று கூறினார்.

மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு ஜிதின் பிரசாதா, கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டின் தகவல் தொழில்நுட்பத்துறை அபார வளர்ச்சி கண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

உலகின் தகவல் தொழில்நுட்ப மையமாக இந்தியாவை மாற்ற மத்திய அரசு பாடுபடும் என்று அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

எல்லை தாண்டிய தீவிரவாத பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியா விரும்புவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தமது இலாக்கா பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாகிஸ்தான் மற்றும் சீனாவுடனான எல்லை பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று கூறினார்.

கடந்த ஆட்சியின்போது ஜி-20 நாடுகளின் தலைமைத்துவம் மற்றும் கோவிட் காலகட்டத்தில் வெளியுறவுத்துறை சிறப்பாக செயலாற்றியதை அவர் சுட்டிக்காட்டினார்.

அண்டை நாடுகளுடனான உறவை மேலும் வலுப்படுத்துவதில் இந்தியா தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும் என்று திரு ஜெயசங்கர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஆந்திர பிரதேசத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சட்டமன்ற கட்சித் தலைவராக தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் திரு சந்திரதபாபு நாயுடு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

விஜயவாடாவில் இன்று நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் அவர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தெலுங்கு தேசம், ஜனசேனா, பிஜேபி ஆகிய கூட்டணிக் கட்சிகளின் புதிய உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

ஒடிஸா மாநில புதிய முதலமைச்சராக பிஜேபி-யைச் சேர்ந்த திரு மோகன் சரண் **Majhi** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

புவனேஸ்வரில் இன்று நடைபெற்ற பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் திரு மோகன் சரண் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

அம்மாநில துணை முதலமைச்சர்களாக திரு கே வி சிங் தியோ மற்றும் திருமதி பிரவதி பரிதா தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.,

ஒடிஸா புதிய முதமைச்சராக திரு மோகன் சரண் மாஜி நாளை பதவியேற்கிறார்.

**[]<<<>>>[]**

அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பெரும் பங்கு வகிப்பதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சியர்களிடையே இன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், அடுத்து வரும் நாட்களில் பல திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘தமிழ் புதல்வன்’ திட்டம் தொடங்கப்படும் என்றும், இது இளைய தலைமுறையினரின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கும் என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டுக்காகவும் மேற்கொள்ளப்படும் மக்கள் நலப்பணிகளை சிறப்பாக செய்ய வேண்டுமென்றும் முதலமைச்சர் மாவட்ட ஆட்சியர்களை கேட்டுக் கொண்டார்.

வருவாய்த்துறையில் பட்டா மாறுதல்., சான்றிதழ்களை பெறுதல் ஆகியவற்றில் பொதுமக்களுக்கு உள்ள சிரமங்களை களைவதற்கு தனி கவனம் செலுத்த வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

போதைப்பொருள் நடமாட்டத்தை முற்றிலுமாக ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திரு மு க ஸ்டாலின் வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

அடுத்த கல்வி ஆண்டு முதல் உயர்கல்வி நிறுவனங்களில் ஆண்டுக்கு இருமுறை மாணவர் சேர்க்கை நடத்த பல்கலைக்கழக மானியக் குழு அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பான கொள்கை முடிவு பல்கலைக்கழக மானியக் குழுவில் எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் ஜெகதீஷ்குமார் தெரிவித்துள்ளார்.

தேர்வு முடிவுகள் வெளியாவதில் தாமதம், தனிப்பட்ட மற்றும் உடல்நலப் பிரச்சினைகள் போன்றவற்றால் மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே இதுவரை மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டு வரும் நிலையில் இம்முடிவை பல்கலைக்கழக மானியக்குழு வெளியிட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நடப்பு ஆண்டிற்கான இளநிலை நீட் தேர்வுக்கான கலந்தாய்வை நிறுத்தி வைக்க உச்சநீதிமன்றம் இன்று மறுத்துவிட்டது.

இது தொடர்பான மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம், கடந்த மே மாதம் ஐந்தாம் தேதி நடைபெற்ற நீட் தேர்வை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களுக்கு பதிலளிக்குமாறு தேசிய தேர்வுகள் முகமைக்கு உத்தரவிட்டது.

விசாரணையை அடுத்த மாதம் எட்டாம் தேதிக்கு ஒத்தி வைப்பதாக கூறிய நீதிமன்றம், இது தொடர்பான மற்றொரு மனுவும் அன்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறியது.

**[]<<<>>>[]**

மலாவி நாட்டு துணை அதிபர் திரு **Saulos chilima** மவிமான விபத்தில் உயிரிழந்ததாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

அந்நாட்டு தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அதிபர் திரு லாசரஸ் சக்வேரா, விபத்து நேரிட்ட விமானத்தில் பயணித்த ஒன்பது பேரும் உயிரிழந்ததாக கூறினார்.

மலாவியில் உள்ள **Mzuzu** -விலிருந்து தலைநகர் **Lilongwe**டநகருக்குச் ராணுவ விமானத்தில் சென்று கொண்டிருந்த போது மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து நேரிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

நடப்பு நிதியாண்டில் இதுவரை இரண்டு லட்சத்து 79 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மாநிலங்களுக்கு நிதி பகிர்வு அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நடப்பு ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டில் மொத்தம் 12 லட்சத்து 19 ஆயிரத்து 783 கோடி ரூபாய் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்திரபிரதேசத்திற்கு 25 ஆயிரம் கோடி ரூபாயும், பீகார், மத்திய பிரதேச மாநிலங்களுக்கு 16 ஆயிரம் கோடி ரூபாயும், மேற்குவங்கத்திற்கு பத்தாயிரம் கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இன்று வெளியான மத்திய நிதி அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

சென்னை கிண்டியில் உள்ள தேசிய முதியோர் நல மருத்துவ மனையில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ சேவையை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியம் இன்று தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், யோகா பயிற்சி முதியோர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்ற காரணத்தால் இன்று தொடங்கி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் பக்க விளைவுகள் இல்லாத நீராவி குளியல், மசாஜ், யோகா சிசிக்சை, உபவாச சிகிச்சை, மண் குளியல், காந்த சிகிச்சை இயற்கை உணவு சிகிச்சை, மூலிகை சிகிச்சை போன்றவைகள் இந்த மருத்துவமனையில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுபோன்ற சிகிச்சை அவர்களின் உடலையும், உள் உறுப்புகளையும் வலுப்படுத்தும் என்றும் திரு மா சுப்ரமணியன் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

ஜெர்மனி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்ஸின் அல்பனோ **Olivetti** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**Stuttgart** நகரில் இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை இங்கிலாந்தின் **Neal skupski** - நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணையை 6-4, 6-2 என்ற செட் கணக்கில் தோற்கடித்தது.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பாகிஸ்தான் - கனடாவை எதிர்கொள்கிறது.

நியூயார்க்கில் நடைபெறும் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.

தோஹாவில் நடைபெற உள்ள இப்போட்டி, இரவு மணி 9.15-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

சிட்னியில் நடைபெறும் இப்போட்டியில் இந்தியாவின் எச் எஸ் பிரணாய், சமீர் வர்மா, மிதுன் மஞ்சுநாத், கிரண் ஜார்ஜ், ஆகர்ஸி காஸியப், மளவிகா பன்சோத் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஹர்ஷிதா ரவுட் - ஸ்ருதி ஸ்வைன் இணை தோல்வியடைந்தது.

**[]<<<>>>[]**

பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவு தர வரிசைப்பட்டியலில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - ஷிராக்ஷெட்டி இணை மூன்றாவது இடத்தை பிடித்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற சிங்கப்பூர் ஓபன் மற்றும் நடப்பு ஆஸ்திரேலிய ஓபன் போட்டிகளிலிருந்து இந்த இணை விலகியதை அடுத்து முதலிடத்திலிருந்து மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

***End of News***